1990 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு.கே.பி.கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டில் ஏரியினை ஆழப்படுத்த 25 ஆயிரம் ரூபாயும், ஏரி கரைகளைப் பலப்படுத்த ஏறக்குறைய 50 ஆயிரம் ரூபாயும் செலவு செய்யப்பட்டுள்ளது. அதுபோல 1988-89ல் சரணாலயத்தில் கூடு அமைக்க 48 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. 1989-ல் நாற்றங்கால் எழுப்பி செடிகள் நட 75 ஆயிரம் ரூபாயும், அதுபோல மரங்கள் நட்டு, சுற்றுச் சுவர் எழுப்ப 75 ஆயிரம் ரூபாயும் அதுபோல பல்வேறு பணிகளுக்காக 1 லட்சத்து 88 ஆயிரம் ரூபாயும், கரைகளைக் கட்டவும், மரங்களை நடவும் 1 லட்சத்து 88 ஆயிரம் ரூபாயும் கடந்த ஆண்டு செலவு செய்ய அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல, பெரிய பெரிய மரங்களை ஆங்காங்கே இருந்து கொண்டு வந்து நட்டு அவற்றை அங்கே வளர்க்க முடியும்; அதற்கான ஏற்பாட்டினை இந்த துறை செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

9–35 மணி

திரு.எஸ்.டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு அந்தப் பகுதிக்கு எத்தனை சுற்றுலாப் பயணிகள் வந்திருந்தார்கள்? சென்னையிலிருந்து காஞ்சிபுரம், மாமல்லபுரம், திருக்கழுக்குன்றம் போன்ற பகுதிகளுக்கு சுற்றுலா வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன; அதேபோல், பஸ் வசதி வேடந்தாங்கலுக்கும் செய்துதர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.கே.பி.கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை சுற்றுலாப் பயணிகள் வந்திருக்கிறார்கள் என்ற தகவல் இல்லை ஆனால் சுற்றுலாப் பயணிகள், அங்கே வந்து கொஞ்ச நேரம் இருந்து, பறவைகளைப் பார்த்து செல்லக்கூடிய அளவிற்கு வசதிகள் செய்து தரப்படும் என்பதனை நான் இங்கே அறிவித்துக் கொள்கிறேன்.

பு.புளியம்பட்டி பேரூராட்சியை நகராட்சியாக்குதல்

*880 திரு.வி.கே.சின்னசாமி:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், பு.புளியம்பட்டி பேரூராட்சியை நகராட்சியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புஞ்சை புளியம்பட்டி பேரூராட்சி ஒன்றியம் என்பது வருடத்திற்கு ரூ. 10 இலட்சத்திற்கு மேலே வருமானம் வருகின்ற இடம். அதோடு மட்டுமல்லாமல், 25,000 வரை ஜனத்தொகை அந்தப் பேரூராட்சி மன்றத்திலே இருக்கிறது. இன்னும் அந்தப் பகுதியிலே இருக்கின்ற மாதம்பாளையம் ஊராட்சி மன்றப் பகுதி, நன்னூர் ஊராட்சி மன்றப் பகுதி, இவை அனைத்தும் புஞ்சை புளியம்பட்டியினுடைய அருகிலே அமைந்திருக்கின்ற நிலைமையிலே இருக்கின்றன. அங்கே இருக்கின்றவர்களுக்கு குடி தண்ணீர் வசதிகூட இல்லை. பக்கத்தில் ஒரு ரோடு மட்டும்தான் குறுக்கே இருக்கிறது. அவர்களுக்கு ஆற்றிலிருந்து கிடைக்கின்ற தண்ணீர் கூட இல்லை. ஆனால் அந்தப் பேரூராட்சி மன்றத்திற்கு நிதி ஆதாரம் இருக்கிறது. பக்கத்தில் இருக்கின்ற ஊராட்சி மன்றங்களுக்கு நிதி ஆதாரம் இல்லை. ஆக, இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, புஞ்சை புளியம்பட்டி பேரூராட்சி மன்றத்தை நகராட்சியாக ஆக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் முயற்சி செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சியைப் பொறுத்தவரையில் ஆண்டு வருமானம் ரூ. 20 இலட்சத்திற்கு இருக்கிறது. அது ஒரு தகுதியாகத் தான் இருக்கிறது. ஆனால், மக்கள் தொகை எண்ணிக்கை 20,000 தேவை. 12,046 மக்கள் தொகைதான் அந்தப் பகுதியில் இருக்கிறார்கள். அதைவிட, இன்னும் அந்தப் பேரூராட்சியிலிருந்து அப்படிப்பட்ட ஒரு கருத்துருவும் அரசுக்கு வரவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புஞ்சை புளியம்பட்டி பேரூராட்சி மன்றத்திலே ஒரு சந்தை இருக்கிறது. தமிழகத்திலே, பொள்ளாச்சிக்கு அடுத்த பெரிய சந்தை, ஆண்டிற்கு ரூ. 6 இலட்சத்திற்கு மேலே அந்தச் சந்தையிலே வருமானம் வருகிறது. அதிலே பாதிதான் அந்தப் பேரூராட்சி மன்றத்திற்கு; மீதியை ஊராட்சி மன்றங்களுக்குச் சேர்த்திருக்கிறார்கள். ஆக, இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, அந்தப் பேரூராட்சி மன்றத்தை நகராட்சியாக ஆக்க வேண்டுமென்று அங்கிருக்கின்ற ஊராட்சிமன்றத் தலைவர்களும் மற்றவர்களும் தீர்மானம் போட்டு, அரசுக்கு அனுப்பியிருப்பதாகத் தகவல் சொல்லியிருக்கின்றார்கள், ஆகவே. இதை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தத் தீர்மானமும் இதுவரையில் அரசாங்கத்திற்கு வரவில்லை. அப்படி வந்தாலும் கூட 12,046 எண்ணிக்கையுள்ள மக்கள் தொகையை வைத்துக் கொண்டு, அதை நகராட்சியாக ஆற்ற இயலாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு வேளை மக்கள் தொகை கூடினால், ஏற்கப்படுமா என்று உறுப்பினர் கேட்கிறார்.

மாண்புமிகு திரு. கோ.சி.மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும்.

பெயர் மாற்றம் செய்தல்

*.5971 திருமதி ஏஸ்.பி.சற்குணம்:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னையில் பழைய வண்ணாரப்பேட்டை புதிய வண்ணாரப்பேட்டை என்ற பெயர்களை மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) மொட்டைத்தோட்டம் முல்லைத் தோட்டமாக்கப் படுமா?

மாண்புமிகு திரு.கோ.சி.மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

திருமதி எஸ்.பி.சற்குணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட சென்னையில், பழைய வண்ணாரப்பேட்டை, புதிய வண்ணாரப்பேட்டை என்ற பெயர்கள் நெடுங்காலமாக இருந்து வருகின்றன. அந்தப் பெயர்கள் சொல்லுகின்றபோதே பலருக்குச்சங்கடமாக இருக்கிறது. சாதாரண வழக்கில் வண்ணயம் பதி என்று நாங்கள் அழைத்து வருகிறோம். எனவே, முறைப்படி அதற்கு வேறு பெயர்கள் சூட்டினால் நலமாக இருக்கும். அந்தத் திட்டம் எதிர்காலத்தில் அமுல் படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த உணர்வைக் கொண்டிருக்கிறாரோ, அதே உணர்வை இந்த அரசும் கொண்டிருக்கிற காரணத்தால், அதுகுறித்துப் பரிசீலித்து, விரைவில் தக்க அறிவிப்பினை அரசு வழங்கும்.

திருமதி எஸ்.பி.சற்குணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்களுடைய கருத்துக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல, 17-வது வட்டத்தில் மொட்டைத்தோட்டம் என்ற பகுதி இருக்கிறது, தோட்டம் என்றாலே செடிகளும், மலர்களுமாகத்தான் இருக்க வேண்டும்.